யா/ ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.
J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை – 2020 – தரம் 08
First Term Examination – 2020 – Grade 08

கத்தோலிக்கத் திருமறை I, II Catholicism I, II	14	T	I, II	இரண்டு மணித்தியாலம் Two Hours

சுட்டெண் Index No

கத்தோலிக்கத் திருமறை

பகுதி I

மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. தூய லூக்காவின் எழுத்தாக்கத்தின் கருப்பொருள்
   1. மரியாள் 2. இயேசு 3. சூசை 4. மனிதன்
2. தூய லூக்கா ஒரு
   1. யூதர் 2. சமாரியர் 3. கிரேக்கர் 4. உரோமர்
3. தூய லூக்கா நற்செய்தியை எழுதியதன் நோக்கம் வெளிப்படுத்துவது.
   1. இயேசு மனுக்குலம் முழுவதற்கும் மீட்பர் 3. 12 குலங்களுக்கு மட்டும் மீட்பர்.
   2. யூதர்களுக்கு மட்டும் மீட்பர் 4. சமாரியர்களுக்கு மட்டும் மீட்பர்.
4. லூக்கா நற்செய்தி தூய ஆவியாரின் நற்செய்தியென காட்டும் வசனம்.
   1. லூக். 2:14 2. லூக். 2:32 3. லூக். 3:21-22 4. லூக். 10:30-37
5. நல்ல சமாரியன் சாவடி பொறுப்பாளரிடம் கொடுத்த தெனாரியம்
   1. 2 2. 3 3. 4 4. 5
6. லூக்கா நற்செய்தி எழுதப்பட்ட காலம்.
   1. கி.பி 80 – 85 2. கி.பி 90 – 95 3. கி.பி 95 – 100 4. கி.பி 45 – 50
7. இயேசுவைப் பார்க்கும் ஆவலுடன் சக்கேயு ஏறிக்கொண்ட மரம்
   1. ஒலிவம் 2. புன்னை 3. கேதுரு 4. காட்டு அத்தி
8. பீடத்தில் செக்கிரியாவின் பணி
   1. வாசகர் 2. அலங்காரம் 3. தூபம் காட்டுதல் 4. விளக்கேற்றுதல்
9. ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டியவர்கள்.
   1. தலைப்பேறான பெண் 2. மாடப்புறா 3. எருது 4. தலைப்பேறான ஆண்
10. இயேசு யெருசலேமில் கொண்டாடியது
    1. கூடார விழா 2. அறுவடை விழா 3. பாஸ்கா விழா 4. பெந்தகோஸ்தே விழா
11. தியோப்பில் என்ற பெயரின் அர்த்தம்
    1. இறைவன் தலைவன் 2. இறைவனின் நண்பன் 3. இறைவனின மீட்பன் 4. இறைவனின் தாய்
12. பாலைவனத்தில் ஒலித்த குரல்
    1. இயேசு 2. திருமுழுக்கு யோவான் 3. யோவான் 4. பேதுரு
13. இயேசு தமது பகிரங்கப் பணியை ஆரம்பித்தது
    1. கலிலேயாவில் 2. சமாரியாவில் 3. நசரேத்தில் 4. எகிப்தில்
14. ஆபிராம் ஆரானை விட்டுச் சென்ற போது அவருக்கு வயது
    1. 70 2. 80 3. 75 4. 90

www.ikeu.lk

15. மீக்கா நூலில் எப்பிராத்தா எனப்படுவது

1. கானா 2. பெத்தானியா 3. கலிலேயா 4. பெத்லேகம்

16. ஏனோத் ஆற்றுப்படுக்கைக்குரிய நதி

1. சிந்து 2. யோர்தான் 3. நைல் 4. ஒரேப்

17. திருமுழுக்கு யோவான் யூத தலைவர்களை அழைத்த விதம்

1. வெள்ளையடித்த கல்லறைகள் 3. விரியன் பாம்புகள்
2. கொல்லும் நஞ்சுகள் 4. சாத்தான்கள்

18. பாலஸ்தீனா நாடு அடிமைப்பட்டிருந்தது

1. உரோமை பேரரசு 2. கிரேக்கப் பேரரசு 3. யூதேயா அரசு 4. பெத்லேகம்

19. திருமுழுக்கு யோவானின் மரணத்தின் போது ஆட்சி செய்த மன்னன்

1. பிலாத்து 2. அன்னாஸ் 3. கைப்பாஸ் 4. ஏரோது அந்திபஸ்

20. இயேசுவின் வளர்ப்புத் தந்தை யோசேப்பு எக் குடும்பத்தை சேர்ந்தவர்

1. யூதா 2. தாவீது 3. பெஞ்சமின் 4. ஆசேர்

$(\mathbf{20 \times 2 = 40})$

பகுதி II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1.

1. லூக்கா எழுதிய இரு நூல்களும் எவை?
2. லூக்கா தூய பவுலின் நண்பர் என்பதனை எவ்வாறு உறுதிப்படுத்த முடியும்?
3. லூக்காவைப் போல் நற்செய்தியை அறிவிக்க எவ்வாறு செயற்படுவீர் என விளக்குக?

$(\mathbf{3 + 4 + 5 = 12})$

2.

1. லூக்கா இயேசுவின் தலைமுறையை யாரோடு ஆரம்பிக்கின்றார்?
2. லூக்கா நற்செய்தியின் படிப்பினைகள் 3 தருக.
3. லூக்கா நற்செய்தியின் வேறு பெயர்கள் 6 தருக.

$(\mathbf{3 + 4 + 5 = 12})$

3.

1. லூக்கா நற்செய்திக்கு ஆதாரங்களைப் பெற்றுக்கொண்ட முறைகள் 2 தருக.
2. பெண்களின் நற்செய்தி எனப்படுவதற்கு 4 உதாரணங்கள் தருக.
3. லூக்கா நற்செய்தி அமைப்பில் இருக்கும் முக்கிய பகுதிகள் 6 எழுதுக.

(3+5+7 = 15)

4.

1. இறைவன் ஏன் ஆபிரகாமை அழைத்தார்?
2. ஆபிரகாமிடம் மிளிர்ந்த நற்பண்புகள் 4 தருக.
3. மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற அழைக்கப்பட்ட நீர் எவ்வாறு செயற்படுவீர்?

$(\mathbf{3 + 4 + 5 = 12})$

5. பின்வருவனவற்றில் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. துயருறுவோர் ஆண்டு
2. தலைமை ஆயர் 1$^{ம்}$ பிரான்சிஸ்
3. திருச்சபையில் பொதுநிலையினர்
4. அன்பிய குழும வாழ்வு

$(\mathbf{3 + 4 + 5 = 12})$

www.lkedu.lk